# அமைச்சர் கெஹலிய பதவி விலகினார் அவரது கடிதம் ஜனாதிபதியால் ஏற்பு!

சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தனது அமைச்சுப் பதவியை இன்று இராஜினாமா செய்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் அவரது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வல்ல, தனது பதவி விலகல் கடிதத்தை இன்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த 2ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் அவர் கைது செய்யப்பட்ட அன்றைய தினமே வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 23 செவ்வாய்க்கிழமை 06.02.2024 கதிர் 175



யாழ் முற்றம்
யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




## நிறை குறைந்த பாண் விற்பனை சுற்றிவளைப்புகள் நடக்கின்றன

நிறை குறைந்த பாண் விற்பனை செய்யும் இடங்கள் சுற்றிவளைக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்புப் பிரிவின் தலைவர் ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சய் வீரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பான புகார்களை "1977" என்ற தொலைபேசி இலக்கத்தில் தெரிவிக்குமாறும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாண் விற்பனை செய்யும் ஒவ்வோர் இடத்திலும் 2024 ஆம் ஆண்டுக்குரிய உரிமம் பெற்ற நிறை பார்த்தல் கருவி இருக்க வேண்டும் எனவும், அதன்படி வாடிக்கையாளர்கள் தாம் வாங்கும் பாண் 450 கிராம் அளவை கொண்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடனடியாக சோதனைகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும், கால் அவகாசம் தருமாறும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்த போதிலும், பாண் தயாரித்தல் என்பது 2➤

## சாந்தன் நாடு திரும்புவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை!

### அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தன் எனப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராசா மீண்டும் நாடு 2➤

## 2024ஆம் ஆண்டு தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

2024 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் 10 பில்லியன் ரூபாவை தேர்தல்களை நடத்துவதற்காக அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசு கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட நிதி இயலுமையில், 2024 ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் 10 பில்லியன் ரூபா தேர்தல்களை நடத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குரிய செலவுகளை குறித்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து முகாமைத்துவம் செய்ய வேண்டுமெனவும் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

எனினும் அந்த இரண்டு தேர்தல்களையும் நடத்துவதற்கு முன்னர் தேவை ஏற்பட்டால் தொடர்புடைய தேர்தல் சட்டங்களுக்கான 2➤

## கெஹலிய ரம்புக்வெல குறித்து நடவடிக்கை எதுவும் இல்லை!

### கட்சிப் பொதுச் செயலர் அறிவிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விவகாரம் நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ளதால் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது!, என கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தரம் குறைந்த இம்யுனோகுளோபுலின் மருந்தினை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அது குறித்துக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தற்போது நீதிமன்ற விவகாரமாக மாறியுள்ளதால் கட்சி எந்த நடவடிக்கையையும்எடுக்கவேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐஸ் போதைப்பொருள் பாவித்த யாழ். பல்கலை மாணவன் கைது

ஐஸ் போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் மீது வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்கினர் எனவும், அடி தாங்க முடியாமல் தப்பியோடி வந்த மாணவன் உயிரைக் காப்பாற்றுமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்தார் எனவும் நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இன்று காலை மேற்படி மாணவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரால் உத்தரவிடப்பட்டது.

அந்த மாணவன் ஐஸ் போதைப் பொருள் பயன்படுத்தியமை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் உறுதியாகியுள்ளது.

மாணவனின் உடலில் பொலிஸார் தாக்கியதற்கான தடயங்களும் இல்லை எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் கூறுகின்றன.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கருணாகரன் நிதர்ஷன் என்ற மாணவன் நேற்றுக் காலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியப் பணிமனையில் முறைப்பாடு செய்த பின்னர் பொலிஸாருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விசேட சோதனை நடவடிக்கையில் 24 மணிநேரத்தில் 733 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 589 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 144 பேரும் அடங்குகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 4 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 8 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின் போது 130 கிராம் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# வாகன விபத்தில் இருவர் மரணம்!

## குழந்தை படுகாயம்

தம்புள்ளை - கண்டி பிரதான வீதியின் விஹாரை சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியோரத்தில் இருந்த நபர் ஒருவரையும், குழந்தை ஒன்றைச் சுமந்து சென்ற பெண் ஒருவரையும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வீதியோரத்தில் இருந்த நபரும், குழந்தையைச் சுமந்து சென்ற பெண்ணும் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணும் நபரும் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி பெண்ணின் 9 மாதக் குழந்தை படுகாயங்களுடன் தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றது.

பண்டாரகம பகுதியில் வசிக்கும் 45 வயதுடைய நபரும், அடையாளம் காணப்படாத 43 வயதுடைய பெண்ணுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் தம்புள்ளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்துள்ளார். அவர் பொலிஸ் பாதுகாப்பில் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# பன்றி வெடிக்கு சிக்கி குடும்பஸ்தர் மரணம்

பன்றி வெடிக்கு சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணவாளன் பட்ட முறிப்பு பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

தேன் எடுப்பதற்காக குறித்த நபரும் மேலும் சிலரும் காட்டுக்குச் சென்றுள்ளனர். இதன்போது பன்றிக்காக வைக்கப்பட்ட வெடியில் சிக்கியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில், படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார். ஆயினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தில் மணவாளன் பட்ட முறிப்பு பகுதியை சேர்ந்த 65 வயதுடைய பழனி வடிவேல் எனும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (02)

# அமைச்சர் கெஹலிய பதவி விலகினார்! ஜனாதிபதிக்கு கடிதத்தை அனுப்பினார்

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுற்றாடல் அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் இறக்குமதி செய்யப் பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எதிர் வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இது குறித்து வாக்கு மூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தில் முன்னிலையா னபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில், சுற்றாடல் அமைச்சர் பதவியில் தொடர்ந் தும் இருப்பதற்கு கெஹலியவுக்குத் தார் மீக உரிமை இல்லை எனத் தெரிவித்து சில சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகள் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பொது மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்



பாட்டிலும் ஈடுபட்டனர்.

இந்தநிலையிலேயே சுற்றாடல் அமைச்சர் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது. (அ)

# இலங்கையில் கஞ்சா பயிரிட ஏற்றுமதி செய்ய அமைச்சரவை அனுமதியினை வழங்கவில்லை

**அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன**

இலங்கையில் கஞ்சா பயிர் செய்வதற்கும் அதனை ஏற்றுமதி செய்வதற்கும் அமைச்சரவை எந்த அனுமதியினையும் வழங்கவில்லை என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக எந்த அமைச்சரவையில் முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கையில் கஞ்சா பயிர்செய்கை மற்றும் ஏற்றுமதி தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக இன்றைய அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன டயனா கமகே அமைச்சரவை அமைச்சர் அல்ல எனவும் அவர் கூறிய கருத்திற்கு தாம் பொறுப்பல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இருவர் கொலை

நாட்டில் வெவ்வேறு இடங்களில் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்காலை மற்றும் சூரியவெவ ஆகிய பகுதிகளில் இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தங்காலை - குடாவெல்ல பகுதியில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை மேற்படி நபரின் வீட்டுக்குள் நுழைந்த சிலர் அவரைத் தாக்கி விட்டு தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சூரியவெவ - பெத்தேவெவ பகுதியில் நேற்று 38 வயதான பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். தாக்குதலுக்கான காரணம் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சாந்தன் நாடு திரும்புவதற்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இரு நாடுகளிலும் இருந்து சாந்தன் இலங்கை திரும்புவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், அவர் நாடு திரும்புவதில் எந்த வித தடையும் இல்லை என்பதுடன், இலங்கை அரசு எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

எனவே, எந்தச் சந்தர்ப்பத்திலும் சாந்தனுக்கு நாடு திரும்ப முடியும் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேலும் குறிப்பிட்டார். (அ)

## 2024ஆம் ஆண்டு தேர்தலுக்காக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்களை நாடாளுமன்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட வேண்டுமெனவும் அமைச்சரவை மேலும் கவனம் செலுத்தியுள்ளது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறித்த விடயங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவிப்பதற்கு தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நிறை குறைந்த பாண் விற்பனை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினசரி நடக்கின்ற ஒரு காரியம் என்பதால் அவற்றைச் சரிசெய்து கொள்வதற்கு கால அவகாசம் தேவையில்லை என்பதே நுகர்வோர் அதிகாரசபையின் கருத்து எனவும் சஞ்சய் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அநேகமான சந்தர்ப்பங்களில் ஒரு பாணின் எடையை 350 கிராமில் தயாரித்து விட்டு, 450 கிராம் பாண் ஒன்றின் விலையான 150 ரூபாவிற்கு விற்கப்படுவதாக அதிகார சபைக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-07)

# 7 இலட்சம் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட பெருந்தொகையான போதை மாத்திரைகளுடன் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியக் கடலோரப் பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போது, அந்த நபர் பெரிய பட்டினம் கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, அவரிடம் இருந்து 7 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் அவர் பயணித்த படகும் ஒன்றும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட maalaikkathir@gmail.com

# பேராதனை பல்கலை மாணவர்களின் முயற்சியில் தன்னார்வு உணவகம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சுத்தமானதும், சுகாதாரமானதுமான உணவு பரிமாறும் உணவகம் ஒன்று பேராதனைப் பல்கலைக் கழக விவசாய பீட மாணவர்களினால் நடாத்திச் செல்லப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் கருத்தின்படி, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் (இதுவொரு உணவுக்கூடம் அல்ல) ஒரு வித்தியாசமான உணவகம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகம் விவசாய பீட மாணவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் பகுதி நேர அட்டவணைகளில் வேலை செய்து இப்பணியினை மேற்கொள்கின்றனர்.

சுத்தமான உணவு, பானங்கள், இனிப்பு வகைகள், மில்க் ஷேக், கேக், ஐஸ் கோப்பி, மோஜிடோ, டோனட்ஸ், சூப்கள், மிருதுவான சிக்கன் பேபர்கர்கள், ஹொட் டொக்ஸ், நூடுல்ஸ் போன்றவை இங்கே நியாயமான விலைகளில் கிடைக்கின்றன.

செயற்கைச் சுவையூட்டிகள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதும் பசும் பால் உடனடியாகப் பெறப்பட்டு பானங்கள் தயாரிக்கப்படுகின்றமை, தினமும் தேவைப்படும் காய்கறிகள் அன்றே கொண்டு வரப்படுகிறமை போன்ற நடைமுறைகளால் இந்த முயற்சி பலரதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை, வளாகத்தில் குழந்தைகளுக்கான அழகிய பொழுதுபோக்கு நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன.

## விசேட தேவையுடைய குழந்தைகளுடன் கனடா சர்வம் அமைப்பு சிறப்பு நிகழ்வு





(வி.ரி. சகாதேவராஜா)

விசேட தேவையுடைய குழந்தைகளுடன் கனடா சர்வம் அமைப்பு கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பு நிகழ்வொன்றை நடாத்தியது.

கனடா சர்வம் அமைப்பின் 2ஆம் வருட பூர்த்தியினை சிறப்பிக்கும் முகமாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (02) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக சர்வம் அமைப்புடன் இணைந்து தங்களது இலவச பராமரிப்பு சேவையை அர்ப்பணித்த கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் எஸ் என்.ரொஷாந்த், உளநல பிரிவு மருத்துவர் யூ.எல்.சராப்தீன், இயன்மருத்துவப் பிரிவு உத்தியோகத்தர்களான ஜி.சந்திரகாஷன், ஏ.ஹொட்ஷன், பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை உத்தியோகத்தர் செல்வி. வை.எம்.யூ. யாபா, தொழில்சார் சிகிச்சை உத்தியோகத்தர் செல்வி எம்.ரி.நஸ்ரின், குழந்தைநல விடுதி வைத்தியர்கள் விசேட பிரிவு ஆசிரியர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சர்வம் அமைப்பின் பிரதிநிதியாக இலங்கையின் நிதி நிருவாகிகளில் ஒருவரான எஸ். ஹேமதாசன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

விசேட பிரிவு குழந்தைகளின் பாடல், நடன நிகழ்வுகள், பேச்சு என்பனவும் அங்கு நடைபெற்றன. குழந்தைகளின் சித்திரக் கண்காட்சியும் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் தாதியபரிபாலகர் என். சசிதரன், தாதியபரிபாலகி திருமதி.எல்.சுஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் மற்றும் குழந்தைகளின் பெற்றோர் ஆகியோரம் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## பொத்துவில் பிரதேச விவசாயிகளின் பெரும்போக வயல் அறுவடை விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட் பட்ட செங்காமம் மற்றும் ரொட்டை ஆகிய பிரதேசங் களில் விவசாய திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வயல் அறுவடை விழா நேற்று இடம்பெற்றது.

உலக உணவு ஸ்தாபனம் மற்றும் விவசாய திணைக்களம் ஆகியன இணைந்து “ஒன்றிணைந்த நெல் சாகுபடி, போசணை முகாமைத்துவம் “ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்று வந்த விவசாய கள பாடசாலையின் இறுதி நிகழ்வான வயல் அறுவடை விழா விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.நர்மதன் தலைமையில் நடைபெற்ற போது விவசாய போதனாசிரியர்களான என்.என்.சித்திரா, எஸ்.எப்.றபீக்கா மற்றும் பிரதேச விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# சிலி காட்டுத்தீ பலி எண்ணிக்கை 122 ஆக உயர்வு நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர்



தென்னமெரிக்க நாடான சிலியின் வினாடெல்மார் மலைப்பகுதியில் பயங்கரமான காட்டுத்தீ ஏற்பட்டு, அது மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருகிறது. தீயணைப்பு வீரர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் தண்ணீரை விசிறி தீயை கட்டுப்படுத்த முயன்று வருகின்றனர். ஆனாலும் தீ கட்டுக்கடங்காமல் எரிந்து வருகிறது.

இந்தக் காட்டுத்தீயால் இதுவரை சுமார் 20 ஆயிரம் ஹெக்டெயர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் அங்குள்ள அரிய வகை தாவரங்கள், விலங்கினங்கள் தீயில் கருகி மடிந்தன. அதனை சுற்றியுள்ள எஸ்ட்ரெல்லா, நவிடாப் ஆகிய பகுதிகளுக்கும் இந்த தீ பரவியது. இதில் அங்குள்ள மூவாயிரம் வீடுகள் எரிந்து நாசமாகின.

இந்தநிலையில் சிலியில் எரியும் காட்டுத் தீயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளதாகவும், நூற்றுக்கணக்கானோர் நிலை என்னவென்று தெரியாதுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வேகமாக பரவி வரும் இந்தத் தீயை அணைப்பது சவாலாக உள்ளது என்றும் பல உடல்கள் மோசமான நிலையில் இருப்பதாகவும், அடையாளம் காண்பது கடினம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடயவியல் துறை அலுவலர்கள், காணாமல்போன தமது உறவினர்களைப் பற்றிப் புகாரளித்த நபர்களிடமிருந்து மரபணுப் பொருட்களின் மாதிரிகளை எடுப்பார்கள் என்றும் அதனடிப்படையில் மேலதிக விசாரணைகள் இடம்பெறும் என்றும் கூறப்படுகிறது.

தீயை அணைக்கும் பணியில் மீட்புப் படையினருக்கு உதவுமாறு பொதுமக்களை அந்நாட்டு அதிபர் கப்ரியல் போரிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த காட்டுத்தீ காரணமாக இனிவரும் நாட்களில் வெப்பநிலை 104 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் என வானிலை அவதான நிலைய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (04)

# அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் வரும்?



காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்காக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்டனி பிளிங்கன் தனது மேற்காசிய சுற்றுப் பயணத்தை நேற்று திங்கட்கிழமை மீண்டும் தொடங்கியுள்ளார்.

அதன் ஒரு பகுதியாக, சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தை அவர் சென்றடைந்தார்.

காஸாவில் இஸ்ரேல் படையினருக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே போர் தொடங்கியதற்குப் பிறகு அந்தப் பகுதியில் பிளிங்கன் மேற்கொள்ளும் ஐந்தாவது சுற்றுப் பயணம் இதுவாகும். இந்தப் பயணத்தின்போது காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இது குறித்து ரியாதில் பிளிங்கனுடன் சென்றுள்ள அமெரிக்க அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர்.

அன்டனி பிளிங்கனின் இந்தச் சுற்றுப் பயணத்தின்போது காஸா போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படும் என்று இப்போதே சொல்ல இயலாது. இந்த விவகாரம் தற்போது ஹமாஸ் அமைப்பினர் எடுக்கும் முடிவில் இருக்கிறது.

ஒருவேளை பிளிங்கனின் முயற்சி வெற்றி பெற்று, மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்காக காஸாவில் சண்டையை நிறுத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுவிட்டால், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் பேச்சுவார்த்தையை நகர்த்த முடியும்.

குண்டுவீச்சால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள காஸாவை மறுசீரமைப்பது, அந்தப் பிராந்தியத்தை நிர்வகிப்பதற்கான அமைப்பை உருவாக்குவது, இறுதியாக, தனி பாலஸ்தீன தேசம் அமைப்பது ஆகியவற்றை நோக்கி பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளோம் என்று, அந்த அதிகாரிகள் கூறினர்.

கட்டார் முன்னிலையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் பலனாக இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளுக்கு இடையே கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் 30 வரை போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது இஸ்ரேல் தரப்பில் 240 பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் 107 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்குப் பதிலாக தங்களால் பிணைக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட 105 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்தது. அவர்களில் 81 பேர் இஸ்ரேலியர்கள். 23 பேர் தாய்லாந்து நாட்டவர். ஒருவர் பிலிப்பின்ஸைச் சேர்ந்தவர்.

எனினும், போர் நிறுத்தத்தை மேலும் நீட்டிப்பதற்கான பேச்சுவார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடர்ந்தது.

இந்தச் சூழலில், மீண்டும் போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்காக இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்தி வரும் கட்டார் கடந்த வெள்ளிக்கிழமை கூறியது.

பிணைக் கைதிகள் விடுவிப்பு தொடர்பாக இஸ்ரேலிடமிருந்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்பது குறித்து ஹமாஸ் அமைப்பு பரிசீலித்து வருகிறது என்று கட்டார் அதிகாரி ஒருவர் கூறினார்.

அதனைக் குறிப்பிட்டே, போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஹமாஸ் எடுக்கும் முடிவின் அடிப்படையில் அமையும் என்று ரியாத்தில் வைத்து அமெரிக்க அதிகாரிகள் தற்போது கூறியுள்ளனர்.

காஸா முழுவதும் இஸ்ரேல் படையினர் கடந்த ஒக்டோபர் 7 முதல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27,365 ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேல் குண்டுவீச்சில் இதுவரை 66,630 பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# சிறையில் உள்ள இம்ரான்கானுக்கு பணிகள் மேற்கொள்ள உத்தரவு



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பல்வேறு ஊழல் வழக்குகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு லாகூரில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான வழக்குகளில் அடுத்தடுத்து தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இம்ரான்கானுக்கு இதுவரை 4 வழக்குகளில் 34 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு வழக்குகளில் இம்ரான்கானுடன் அவரது மனைவி புஷ்ரா பீவியும், முன்னாள் வெளியுறவு அமைச்சரான மஹ்மூத் ஷா குரேஷியும் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இம்ரான்கானும், குரேஷியும் அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் புஷ்ரா பீவி, கிளைச் சிறையாக அறிவிக்கப்பட்ட இம்ரான்கானின் இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அடியாலா சிறையில் இம்ரான்கானுக்கும், குரேஷிக்கும் உயர்மட்ட கைதிகள் என்கிற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதாவது சாதாரண கைதிகளைப் போல அல்லாமல் சிறையில் அவர்களுக்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இருவரும் தங்களுக்கு தேவையான உணவை தாங்களே தயாரித்து சாப்பிட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் உயர்மட்ட கைதிகளாக உள்ள போதிலும் இம்ரான்கானும், குரேஷியும் சிறை வளாகத்தில் பணிகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம் என சிறை நிர்வாகம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. எனினும் இருவரும் எந்த மாதிரியான பணிகளைச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளனர் என்கிற தகவல் வெளியாகவில்லை. - என்று பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

# பிரித்தானிய மன்னர் சார்ல்ஸ்க்கு புற்றுநோய் பக்கிங்ஹாம் அரண்மனை தகவல் வெளியீடு

பிரித்தானிய அரச பரம்பரையின் தற்போதைய அரசரான மூன்றாம் சார்ல்ஸ் சில மாதங்களாக புரோஸ்டேட் சுரப்பி வீக்கப் பிரச்சினையால் அவதிப்பட்டு வந்தார். இதற்காக அவர் லண்டனில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் அரசரின் உடலில் புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. புரோஸ்டேட் சிகிச்சைகாக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றபோது புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில், 'புரோஸ்டேட் சிகிச்சைகாக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றபோது மேலும் சில பிரச்சனைகள் இருப்பது தெரியவந்தது. அதன்பிறகு நடந்த பரிசோதனையில் அவருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டுள்ளது. இதற்காக மன்னருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மன்னர் சிகிச்சையில் இருப்பதால் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் சிகிச்சைக் கால கட்டத்தில் அரசுப் பணிகள் மற்றும் ஆவணப் பணிகளை அரசர் வழக்கம் போல் மேற்கொள்வார். மன்னர் விரைவில் குணமடைந்து பொதுப் பணிக்குத் திரும்புவார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)



# அக்-இக்றஃ வித்தியாலய பிரதி அதிபராக எம்.எஸ். முஹம்மட் பாஹிம் கடமையேற்பு



(கே.ஏ.ஹமீட்)

அட்டாளைச்சேனை கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட கமு-அக்-அல்- அர்ஹம் வித்தியாலயத்தில் ஆசிரியராக நீண்ட காலமாக கடமையாற்றி இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 ற்குப் பதவி உயர்வு பெற்ற எம்.எஸ். முஹம்மட் பாஹிம், அட்டாளைச்சேனை அக்- இக்றஃ வித்தியாலயத்தின் பிரதி அதிபராக கடமையேற்றுக் கொண்டுள்ளார்.

சுமார் 18 வருடங்கள் இலங்கை ஆசிரிய சேவையில் ஓர் நல்லாசானாக பணிபுரிந்த இவர் ஆசிரிய ஆலோசகராகவும் சிறிது காலம் கடமையாற்றினார்.

இவரது கடமை ஏற்பு நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏஎம். நௌபர்தீன் மற்றும் அட்டாளச்சேனை அனைத்து அதிபர் சங்கத் தலைவர் ஏ.எம். அன்சார் மற்றும் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாரம்பரிய நிகழ்ச்சியில் கலைச்சுடர் கற்பிட்டி ஜப்பார் பற்றிய கண்ணோட்டம்



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இன்று செவ்வாய்க்கிழமை 2024 பெப்ரவரி 6ஆம் திகதி இரவு 8.15அளவில் ஒலிபரப்பாகவுள்ள " பாரம்பரியம் " நிகழ்ச்சியில் நீண்ட காலமாக தேசிய வானொலியின் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு எழுத்து, பேச்சு, நடிப்பு போன்றவற்றால் பாரிய பங்களிப்பு நல்கிய 'லியாவுல் பன்னான்' (கலைச்சுடர்) மர்ஹூம் கற்பிட்டி எஸ்.ஐ.எம்.ஏ ஜப்பார் அவர்களது காத்திரமான ஆளுமை குறித்து பேராசிரியர் எம்.எஸ்.எம் .அனஸ் அவர்கள் விரிவாக விளக்கவிருக்கிறார்.

நேயர்களது நினைவில் இன்றும் நிலைத்திருக்கும் பிறவிக் கலைஞர் மர்ஹூம் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் அவர்கள் இயல்பான கம்பீரமான குரல் கொண்ட ஒருவர் முஸ்லிம் சேவையில் உரைச்சித்திரம், இசைச்சித்திரம், இஸ்லாமிய நற்சிந்தனை, இஸ்லாமிய கீதங்கள் என எழுதிய அவர் பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரிந்தவர்.

தனது அனுபவத்தில் கண்ட கேட்ட சம்பவங்களை மையமாக வைத்து சமூகச் சீர்கேடுகளை, தொழிலாளர், முதலாளிகளுக்கிடையிலான முரண்பாடுகளை, தனிமனிதத் துயரங்களை, உயர்மட்டத்தில் பின்னிப்பிணைந்திருக்கும் அவலங்களையெல்லாம் அற்புதமான நாடகமாக்குவதில் அவர் வல்லவராகத் திகழ்ந்தார்.

முஸ்லிம் நாடகக் குறியிசைக்கு முன்பே அவரது கணீர் குரல் ஒலித்து நாடகத்துக்கு ரத்தினச் சுருக்கமாக ஒரு விளக்கமளிப்பது அவரது தனித்துவ முத்திரை.

அருமையான அடுக்கு வசனங்களோடு அவரது சமூக சீர்திருத்தக் கட்டுரைத் தொடரான 'மனிதன்' "நவமணி" பத்திரிகையில் நூறு அங்கங்களையும் தாண்டி வெளிவந்ததையும் மறக்க முடியாது.

மறைந்த மாபெரும் கலைஞர் கற்பிட்டி எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் குறித்த சிறப்பு பாரம்பரியம் நிகழ்ச்சியை கலாபூஷணம் எம்.எஸ்.எம் ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை உதவிப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா றினுஷியா தயாரித்தளிக்கிறார். நிகழ்ச்சியில் ஜப்பார் அவர்களது குரல் பதிவுகளும் இடம் பெறுகின்றமை விசேட அம்சமாகும்.

# முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பகுதி மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

வைத்தியசாலை வசதிகளற்ற மற்றும் தூர இடங்களில் வைத்தியசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களைச் சேர்ந்த மிகவும் வைத்திய வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத கஸ்டமான பொருளாதார சூழ்நிலையில் வாழும் மக்களின் மருத்துவ தேவைகளை மக்களின் காலடிக்குச் சென்று தீர்த்து வைக்கும் வகையில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளை ஒழுங்கு செய்திருந்த இலவச மருத்துவ முகாம் கெருடமடு பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மணல்கந்தல், வசந்தபுரம் மற்றும் கெருடமடு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.

மருத்துவம் சம்பந்தமான ஆலோசனைகள், உணவுப் பயன்பாடு, முதலுதவி, உடற் பரிசோதனைகள் மற்றும் மருத்துவ உதவிகளும் இப்பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டன.

# காக்காச்சிவட்டையில் At378 புதிய நெல்லின அறுவடை



(வி.ரி.சகாதேவராஜா)

வெல்லாவெளி பிரதேசத்தில் உள்ள காக்காச்சிவட்டைப் பிரிவில் செய்கை பண்ணப்பட்ட At378 புதிய நெல்லின அறுவடை விழா நேற்று திங்கட்கிழமை (5) நடைபெற்றது.

காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் தெ.கோபி தலைமையில், அலியார்வட்டை கண்டத்தில் முன்மாதிரி துண்டமாக செய்கைபண்ணப்பட்ட புதிய நெல்லின அறுவடை விழாவில் பிரதம அதிதியாக உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன் கலந்து கொண்டார்.

வலயத்தின் விவசாய போதனாசிரியர்கள், தொழிநுட்ப உதவியாளர்கள், டிப்ளோமா பயிலுனர்கள், விவசாயிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிய நெல் இனம் சம்பந்தமான விடயங்கள், நெல் இனத்தின் இயல்புகள், விளைச்சல் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.



# சுதந்திர தினத்தன்றுகூட தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

4 ஆம் திகதி கிளிநொச்சியில் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலீஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினைக் கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அநீதிகளையும், உரிமை மீறல்களையும், வடக்குக் கிழக்கிலே இடம்பெறும் சிங்கள பௌத்த மயமாக்கலையும் கண்டிக்கும் வகையிலும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை முன்னிறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும், வடக்கினைச் சேர்ந்த பல சமூக அமைப்புக்களும் சேர்ந்து இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தன்று கிளிநொச்சியிலே அமைதி வழிப் போராட்டம் ஒன்றிலே ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதல்களிலே நீர்த்தாரைகளும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. மாணவர்களை இழுத்தும், தள்ளியும், நிலத்தில் வீழ்த்தியும் பொலிஸார் மிகவும் மோசமான முறையிலே வன்முறையிலே ஈடுபட்டனர். போராட்டத்திலே பங்குபற்றிய மாணவர்களிலே சிலர் கைது செய்யப்பட்டனர்.

அநீதிகளை எதிர்த்தும், உரிமைகளைக் கோரியும் பல்கலைக்கழக மாணவர்களும், பொது மக்களும் நேற்று மேற்கொண்ட போராட்டத்தினைப் பொலிஸார் வன்முறை மூலம் நசுக்க முற்பட்ட செயலினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நேற்று மாணவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை இலங்கையில் சுதந்திர தினத்தன்று கூட அங்கு வாழும் தமிழ் மக்களுக்குச் சுதந்திரமாக ஒன்று கூடவும், தமது உரிமைகளை வலியுறுத்திப் போராடவும் சுதந்திரம் இல்லை என்பதனை உலகுக்கு வெளிக்காட்டியது.

30 வருட ஆயுதப் போராட்டம் முடிவுற்ற பின்னர், தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகவும், தம்மீது தொடரும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் அமைதி வழியில் போராடி வருகின்றனர். காணி அபகரிப்பு, இராணுவ மயமாக்கம், சிங்கள பௌத்த மயமாக்கல் என்பவற்றுக்கு எதிராகவும், அரசியற் கைதிகளின் விடுதலை, காணமால் ஆக்கப்பட்டோருக்கான நீதி போன்ற விடயங்களிற்காக தமிழ் மக்களின் போராட்டங்கள் வடக்குக் கிழக்கிலே தொடர்ந்த வண்ணம் உள்ளன. இந்தப் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்ப்பதனைத் தவிர்த்து, தனது பெரும்பான்மைவாத வன்முறையினைத் தமிழ் மக்கள் மீது அரசு தொடர்ந்தும் ஏவி வருகிறது.

போராட்டங்களை நசுக்குவதன் மூலம் தன்னுடைய இருப்பினைத் தக்க வைக்க முடியும் என இந்த அரசாங்கம் கருதுகிறது. மக்களின் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான சுதந்திரம் என்பவற்றினைச் சட்டங்கள் மூலமும், கொடூர வன்முறை மூலமும் அரசு பறித்து வருகிறது. இந்தச் செயன்முறைகளினதும், சிங்கள பௌத்தப் பெரும்பான்மைவாதத்தினதும் ஒரு வடிவமே நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை ஆகும்.

சுதந்திரத்தின் அர்த்தத்தினைக் கேலிக்கூத்தாக்கும் அரசாங்கத்தின் நேற்றைய வன்முறைக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி, பிராந்திய வேறுபாடின்றிக் குரல் கொடுக்க வேண்டும் என யாழ்ப்பானப் பல்கலைகக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது.

இனப் பிரச்சினை, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு நிலைத்திருக்கக் கூடிய, நீதியான தீர்வுகளைக் காண்பதே அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையினை உருவாக்கும். அதனை விடுத்து வன்முறையினாலும், ஒடுக்கும் சட்டங்களினாலும் மக்களின் எதிர்ப்புக் குரலினை நசுக்கலாம் என்ற அரசின் எண்ணம் ஒரு போதும் நிறைவேறாது.

நெருக்கடி ஒன்றினை நாம் சந்தித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில், நாம் ஒன்றுபட்டு எம்மத்தியில் இருக்கும் ஜனநாயக வெளிகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இந்த வெளிகளில் நாம் பொதுமக்களாகக் கூட்டுணர்வுடன் துணிச்சலுடன் இயங்குவதன் மூலம் மாத்திரமே, ஜனநாயகத்தினைப் பலப்படுத்தி, அரசின் அநீதி மிக்க நடவடிக்கைகளைத் தோற்கடிக்கலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நம்புகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குவில் இந்துக் கல்லூரி தொழிநுட்ப பீடம் கல்வி அமைச்சர் பிரேமஜயந்தவினால் திறப்பு

யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக் கல்லூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழிநுட்ப பீடம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரின் பதில் அதிபர் கே.குமணன் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டஸ், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கடந்த 2021ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட குறித்த தொழிநுட்ப ஆய்வுகூடம் மூன்று மாடிகளை கொண்டதாக 76 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)








# இரண்டாவது நாளாகவும் விரிவுரையாளர் போராட்டம்



(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை தொழிநுட்பக்கல்லூரி முன்னாள் வருகைதரு விரிவுரையாளர்கள் இருவர் முன்னெடுத்துள்ள போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

இவர்கள் இருவரும் கடந்த ஆறு வருடங்களாக சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் வருகைதரு விரிவுரையாளர்களாக கடமையாற்றிய நிலையில் கல்லூரிக்கு புதிதாக வந்த அதிபரால் பணி நீக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி நேற்று திங்கட்கிழமை குறித்த போராட்டம் ஆரம்பமாகியிருந்தது. இந்நிலையில் இரண்டாவது நாளாக இன்றும் போராட்டம் தொடர்ந்துள்ளது.

இந்தப் போராட்டம் குறித்து தொழில்நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இருவரும் தெரிவித்தனர்.

# பல்கலைக்கு தெரிவான மாணவர் மருதமுனையில் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் புதிய நிர்வாகத்தின் முதல் செயற்திட்டமாக 2022-2023 கல்வியாண்டில் அரச பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மருதூர் கொத்தன் கலையரங்கில் வெகு விமர்சையாக அமைப்பின் தலைவர் ஏ.பைஹான் அஹமட தலைமை இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு அதிதிகளாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், சட்டத்தரணி எம்.ஐ. இயாஸ்தீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான கலீல் முஸ்தபா, டாக்டர் சஸ்லி ஹமீட், பரக்கத் டெக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஐ.ஏ. பரீட் மற்றும் மருதமுனை இளங்கலைப் பட்டதாரிகள் அமைப்பின் ஆலோசனை சபை உறுப்பினர்கள், இளங்கலைப் பட்டதாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளினால் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2024 இல் வெளியிடப்பெற்றது.